**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 176/2019 |
| Name | : Sabareeswaran |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2024

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். கிராம விடியல் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.05.2016 ம் தேதி கிருஷ்ணாபுரத்தில் காலை 06.00 மணிக்கு நான் எனது அப்பாவிற்கு சொந்தமான டீ கடையில் இருந்த போது ராஜு என்பவரும் அவரது மகன் பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் கிழக்கிலிருந்து மேற்காக நடந்து வந்து கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்காக வேகமாக வந்த TVS XL ராஜு என்பவர் மீது மோதி இடித்து அவர் கீழே விழுந்து பின் தலையில் அடிப்பட்டது. அதை நானும், என் அப்பாவும் பார்த்தோம். என் அப்பா தற்போது உயிருடன் இல்லை. நானும், என் அப்பாவும் சென்று கீழே விழுந்து ராஜுவை துக்கி பார்த்தோம். பின் பக்க தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது. உடனே அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி விபத்தை ஏற்படுத்திய TVS XL ஓட்டி வந்த நபரை விசாரித்த போது சோழமாதேவியைச்

சேர்ந்த முருகன் மகன் தங்கவேல் என்று சொன்னார். அவர் ஆஜர் எதிரி. அவரை எனக்கு தற்போதும் அடையாளம் தெரியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சுமார் 10 வருடங்களாக டீ கடை நடத்தி வருகிறேன். நான் வழக்கமாக டீ கடை எப்போது திறப்பேன் என்றால் 04.30 மணி முதல் 05.00 மணிக்குள் திறந்துவிடுவேன். டீ கடைக்கு டீ குடிக்க காலை சுமார் 10–20 பேர் வரை வருவார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதியில் டீ கடையில் சுமார் 4 பேர் இருந்தார்கள். அவர்கள் பெயர் ஞாபகம் உள்ளா என்றால் என் அப்பா இருந்தார் நான் இருந்தேன். மாணிக்கராஜ் என்பவர் இருந்தார். மற்ற இருவர் யார் என்று ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் புகார்தாரர் எனது ஊரைச் சேர்ந்தவர் துரத்து உறவினர் ஆவார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எனது டீ கடைக்கு சுமார் 200 மீட்டர் துரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் கடையின் வெளியே நின்று கொண்டிருந்தேன். என் அப்பா டீ போட்டுக்கொண்டிருந்தார். விபத்து நடந்த பகுதி வளைவு, நெளிவாக உள்ள பகுதி என்றால் சரிதான்.

(2) எனது கடையில் இருந்து பார்த்தால் சம்பவம் நடந்த இடம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தின் போது புகார்தாரர் பாலசுப்பிரமணியம் உடன் யார் வந்தார் என்றால் ஆஜர் எதிரி தங்கவேல் வந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் எதிரி தான் ஓட்டி வந்தார். சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சத்தம் கேட்டதால் நேராக போய் பார்த்தேன். விபத்தில் காயம்பட்டவருக்கு தலையின் பின் பக்கம் ரத்தக் காயம் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்தவர்கள் சொல்லி தெரிந்ததா என்றால் நானும், என் அப்பாவும் சேர்ந்து விபத்தில் அடிப்பட்வரின் தலையை துக்கி பார்த்தோம். டீ கடையில் அப்போது இருந்த நான்கு பேருமே விபத்து நடந்த இடத்திற்கு வந்தார்கள். நான் போலீசார் விசாரணையில் மேற்கண்டவாறு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவரை மருத்துவமனையில் சேர்க்க யார் ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள் என்றால் அங்கிருந்தவர்கள் போன் செய்தார்கள் யார் என்று தெரியவில்லை.

(3) சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது என்றால் சுமார் ½ மணி நேரம் கழித்து வந்தது. ஆம்புலன்ஸ் எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. நான் மருத்துவமனைக்கு உடன் செல்லவில்லை. காயம்பட்டவர் எனது உறவினர் என்பதால் விபத்து இழப்பீட்டு தொகை பெற வேண்டி பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.07 11:38:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்